21 JUL
Eastern University,

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

முதல் கலைமாணித் தேர்வு 1999/2000 (வெளிவாரி)
(டிசெம்பர்-2003/ஜனவரி-2004)

**PS 101** அரசறிவியலுக்கோர் அறிமுகம்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

01. அரசியல் விஞ்ஞானத்தின் வியாபகத்தினைச் சுருக்கமாக ஆராய்க.

02. (அ) "அரசு" என்பதிலிருந்து யாது விளங்குகின்றீர்?
(ஆ) நவீன அரசின் மூலக்கூறுகளை சுருக்கமாக விளக்குக.

03. "வரலாற்றுப் பரிணாமத்தினால் இயற்கையாக வளரும் நிறுவனமே அரசாகும்." இக்கூற்றினை ஏற்றுக்கொள்கின்றீரா? நியாயம் தருக.

04. (அ) "இறைமை" என்ற பதத்திலிருந்து யாது விளங்குகின்றீர்?
(ஆ) இறைமை என்ற பதம் அரசியல் விஞ்ஞானத்தில் வேறுபட்ட கருத்துக்களில் பயன்படுத்தப்படுகிறது." சுருக்கமாக ஆராய்க.

05. (அ) அரசியல் விஞ்ஞானத்தில் "சட்டம்" என்ற பதம் என்ன கருத்தில் விளங்கிக் கொள்ளப்படுகிறது.
(ஆ) சட்டத்தின் பிரதான மூலகங்களைத் தெளிவுபடுத்துக.

06. (அ) "யாப்பு" என்ற பதத்தினை வரையறை செய்க.
(ஆ) அரிஸ்ரோட்டில் கூறும் அரசின் வகைப்பாடுகளைப் பகுப்பாய்வு செய்க.

07. (அ) சமஸ்டி (Federation) இணைவு (Confederation) ஆகிய இரண்டு பதங்களையும் வேறுபடுத்துக.
(ஆ) சமஸ்டி முறையிலுள்ள நன்மைகள், தீமைகள் தொடர்பாகப் பகுப்பாய்வு செய்க.

08. “அரசாங்கச் செயற்பாட்டிற்கு இறுக்கமான வலுவேறாக்கக் கொள்கை பொருத்தப்பாடானதொன்றல்ல” இக்கருத்தினை மொண்டெஸ்கியூவின் வலுவேறாக்கல் தத்துவத்துடன் தொடர்புபடுத்தி ஆராய்க.

09. விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தினை அடிப்படையாகக் கொண்டு சிறுபாண்மையோர் பிரதிநிதித்துவத்திலுள்ள குறைபாடுகளை பகுப்பாய்வு செய்க.

10. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

(அ) சட்டசபை
(ஆ) பிரதிநிதித்துவ ஜனநாயகம்
(இ) அரசியல் கட்சிகள்
(ஈ) சமூக ஒப்பந்தக் கோட்பாடு

*************